# THE MORNING STAR

*Registered as a Newspaper.* ( Established 1841 ) Published Every Friday

Vol. 137 JAFFNA, FRIDAY, 11TH NOVEMBER, 1977. No. 43


RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

## The Kadirgamars in Rhode Island

We give below Extracts from a report by Bob Mc Namee, a Staff Reporter of the Rhode Island (Pawtucket) Times:—

A school teacher from a tiny republic in the Indian Ocean is teaching some New England Yankees something about their roots in exchange for a look at their schools.

"He's helping us reclaim a part of our heritage we never should have forgotten about, but did" said the Rev. David R. Henry, Rector of the Smithfield Avenue United Church of Christ in Pawtucket.

The school teacher is Rajan Kadirgamar, who arrived in Pawtucket earlier this month. He is Principal of Jaffna College, a Christian school on the Northern tip of Sri Lanka, formerly Ceylon, that was founded more than 150 years ago by New England Missionaries of the Congregational Church. It has 1,000 students, grades one through 12 and some college courses.

His trip to the Pawtucket area is part of an exchange programme between the Rhode Island Conference, United Church of Christ formerly the Congregationalists — and Church leaders in Sri Lanka. Next year the Rhode Island Conference hopes to send several representatives to the country of 13 million just south of India.

It is not Mr. Kadirgamar's first trip to the United States. In 1963 he earned his Masters in science education from Columbia University. But in the 14 years he has been away from this country, there have been changes in our schools, he says, after touring a number of Rhode Island schools, including Seekonk High School, Rhode Island College and the University of Rhode Island.

"The facilities are better equipped and the teachers better trained," he said. "And Rhode Island students are much more disciplined than those in New York."

"I have told them (American students) that they're the most fortunate students in the world," he said. "They have everything they want. In Sri Lanka, there is tremendous competition to get to the top. But few will succeed. There are fewer opportunities in our country for education. And it is too expensive now to come abroad. Even Junior Colleges are up several thousand dollars since a few years ago".

But while educational opportunities might be lacking in Sri Lanka, they are innovative. At Jaffna College the 115 eleventh and twelfth grade students have adopted 17 poor families as a community development project.

While in Pawtucket through early November, the Kadirgamars are living with Lois Bryant, Minister of education at the Smithfield Avenue Church as guests of Seekonk Congregational, United Church of Christ, for several weeks.

They almost never made it out of Sri Lanka. The Kadirgamars were delayed several weeks by "racial" disturbances between the country's two majority groups, the Singhalese, mainly Buddhist, and the Tamils, Hindu. Several hundred persons were killed. There was much looting. Many homes were broken into.

Meanwhile, the Kadirgamars aren't the only ones benefitting from the exchange program. He has spoken and preached to a number of adult and youth groups in the State. An attentive listener has been Reverend Henry.

One day recently he sat listening while Mr. Kadirgamar told stories of New England's influence in Ceylon during the 1800s how the Congregationalists came from Massachusetts in 1816, how President Grover Cleveland's brother in law as Principal, like Mr. Kadirgamar, of Jaffna Cellege in 1872.

"Mr. Kadirgamar has helped me realise the worldwide vision of the Congregationalists and the missionary sense of New England, something we had forgotten," Reverend Henry said.

## A Correction

We are informed that the work the Rev. L. N. Hitchcock is now carrying ont at Uri, Karainagar, is not with the CEYNOR Project as mistakenlv stated in the Diocesan Bulletin of October, 1977. We are happy to publish this correction.

---

## Weddings

### Muttiah — Senathirajah

The wedding was solemnised at the J. D. C. S. I. Church, Erlalai North, on Saturday, the 29th October, 1977, at 4 p. m. of Mr. M. Jeyaweeran, a son of Mr. and Mrs. P. W. J. Muttiah, of Kaddudai. Manipay, and Miss Pushpavathany, daughter of Mr. and Mrs. J. D. Senathirajah of Kadduvan South, Tellippallai.

The Rev. S. T. Aseervatham officiated, assisted by the Rev. A. C. Mathanarajah.

---

## "MISSION"

*(A summary of the address delivered by the Rev. A. C. Mathanaraj, the Presbyter of C. S. I. Church, Manipay, at the public meeting of the Council Festival on the 26th October.)*

He spoke on "Christian Mission". At the outset, he presented the various understandings of the world "Mission" in the minds of present and past Christian leaders. Then he ventured to see the relationship between evangelism and social service. He continued that the meaning Christian Mission should be understood in the light of the Mission of Jesus Christ. He came to serve and not to be served. He preached the Kingdom of God and also expressed Himself through action. He fed the poor, tended the wounded, healed the sick, mended the broken heart, raised the dead. We can not seperate His preaching from His deeds.

Now He is sending us into the world just as He was sent by the Father. Therefore, our mission in this world is to minister as He did. In this respect we find a close connection between evangelism or preaching and social service. This relationship should essentially be clear in our minds. For some people social service is only a beginning in the process of changing the heart to Christianity, which is their ultimate goal. This is like the bait in the fishing hook. Those who are converted in this respect always find to be at the receiving end. For some others social service is only an expression of evangelism. For still some others, social service and evangelism appear to be two friends. They are connected to each other but at the same time they can function individually also. They do not express each other and they have a beginning and an end for themselves. However, both reveal love fully. The National Evangelical Anglican Congress held in 1967 said, "Evangelism and compassionate service belong together in the mission of God." This reminds us of an underlying truth which runs through the Gospel of John. First, we see the need in a person and, secondly, we desire to fulfil that need in him. If we do not see the need and desire to fulfil it, we can not say that Christ is in us. The mission of the Church is also the same. Needs differ and methods of fulfilment also differ. But the moving force within us is love and this force helps us to find a common ground in such situations.

Evangelism and social service can exist separately and no one should be forced to cling on to both together. Situations differ and our calling also varies. Often we find men who find life heavily and disappointing without Christ in them. Sometime he is crushed between mundane problems. In such situations we are called to express our calling and serve in the best way possible.

---


The 30th Annual Festival

of

**CAROL SINGING**

BY

**THE YOUTH**

OF THE

**NORTH**

at

Chundikuli Girls' College Hall

on

**Tuesday, 22nd November, 1977**

**at 6-00 p. m.**

*Admission by Programme.*


---


**Jaffna Western Music Society**

**PIANOFORTE**

and

**VIOLIN RECITAL**

by

**Mrs. Nirmalene Kumarakulasinghe**

and

**Miss Luxmidevi Rasaratnam**

on

Thursday, 24th November, 1977

at 5 p. m.

in the

Chundikuli Girls' College Hall.

**Admission by Programme**

**Rs. 3/- and Rs. 1/50.**


---

*In Memoriam*

## Mr. T. T. Jayaratnam

Although a year has passed since the demise of Mr. T. T. Jayaratnam, the architect of J/Mahajana College, Tellippalai, yet we feel that he is still with us. Was it yesterday that he taught English with accents sweet and swell and then collapsed in the arms of his dearly beloved daughter? His death was so sudden that it eclipsed the mental equilibrium of all who listened to the obituraly announcements on the fateful day of October 29, 1976. Sober, sagacious and clubable, his comradiere won him a large number of friends among all communities of Sri Lanka. His students occupy high positions in all countries from Peking to Peru and they and thousands more will always revere his sacred memory and contemplate with veneration Mahajana Matha.

*Cor.*

# உதயதாரகை
## UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 137 ] 11 — 11 — 1977 [ இதழ் 43


## இலங்கையும் கல்வியும்

மக்கள் தோன்றிய காலந்தொட்டு அறிவு முக்கிய காரணமாக வாழ்க்கையின் முன்னேற்றத்தில் இருந்து வந்ததென்பதை வரலாற்றுக்கூடாக அறிகின்றோம். ஆதிகால மனித வாழ்க்கைக்கும், தற்கால வாழ்க்கைக்குமுள்ள வேறுபாட்டையும் அறியக் கூடியதாயிருக்கின்றது. இவ்வேறுபாட்டுக்குக் காரணமாயமைந்தது மக்களின் அறிவு வளர்ச்சியேயெனலாம். அறிவு வளர வளர வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டு வந்தன. இதன் காரணமாக மக்கள் அறிவு பெறும் வழிகளைக் கடைப்பிடித்தார்கள். இதன் பயனாகக் கல்வி என்றொரு கோட்பாட்டுக்குள் அறிவை வளர்த்து வந்தனர். அறிவு வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்ட கல்வி காலஞ் செல்லச் செல்ல பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றும் நோக்குடன் அமைந்து கொண்டு வந்ததென்பதில் கடந்தகாலக் கல்வி முறைக்கூடாக அறிகின்றோம். மக்களின் வாழ்க்கையில் நெருக்கடி ஏற்பட்டதும் கல்வியின் நோக்கமும் மாறிக்கொண்டு, கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட கல்வி மாற்றத்திலிருந்து இந்த உண்மையை அறியக் கூடியதாக இருக்கின்றது. ஆதிகால மக்கள், மக்களுக்கு நல்ல அறிவைக் கொடுத்தால், நாட்டில் பல முன்னேற்றங்களைக் காணலாமென்று திடநம்பிக்கை உடையவர்களாயிருந்தனர். இதன் பயனாக நாட்டில் அன்பு, சமாதானம், ஒருவரை ஒருவர் தாங்கி நடக்கும் சக்தி, பண்பு மக்கள் மத்தியில் நிலவி, ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற எண்ணத்தில் வாழ்ந்து வந்தார்கள். இதன் பயனாக நம் தீவாகிய இலங்கைத் தீவில் பல முன்னேற்றங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

காலத்துக்குக் காலமேற்பட்ட அரசியல் மாற்றத்தினால் பல்வேறு முன்னேற்றங்களையும் பல்வேறு ரீதியாகப் பல்வேறு நிலையில் வைத்துப் பார்க்கலாம். அந்நியராட்சிக் காலத்தில் பொருளாதார ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பல்வேறு மாற்றங்களைக் கண்டோம். இவர்கள் காலத்தில் இந்நாட்டு மக்களுக்குள்ளே, அதாவது மனக்கசப்புமின்றி, அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி என்ற நிலையில் முன்னேறிச் சென்றது. ஆனால் சுதேசிகளின் கையில் இலங்கை அகப்பட்டபொழுது நாட்டு மக்களுக்குள்ளே பல பிரிவினைகளும், பெரும்பான்மை, சிறுபான்மை என இன பேதங்களும் உருவாகின. அரசியல் மாற்றங்களினால் காலத்துக்குக் காலம் கொள்கைகளும், கல்வித் திட்டங்களும் வருங்காலத்தை உணராது அந்தந்தக் காலத்தைச் சமாளிக்கும் வகையில் மாத்திரம் மாற்றியமைக்கப்பட்டதனால் கல்வி அறிவுக்கே என்ற நோக்கம் முற்றாகத் தகர்த்தெறியப்பட்டது. இதன் பலாபலனைத் தற்காலத்தில் நம்நாட்டில் நடைபெறும் பல சம்பவங்களுக்கூடாக அறியக்கூடியதாயுள்ளது நாட்டிலுள்ள சகல மக்களும் ஒருவரையொருவர் நன்கு அறிந்து கொள்ளக் கூடிய வகையில் கல்வி அமையவில்லை என்பதையும் தற்கால நிலை எடுத்துக் காட்டுகின்றது. என்ன காரணம் என்றே கூறமுடியாத நிலைக்கு நம்நாட்டில் பல திகிலிடும் சம்பவங்கள் நடந்தன. நடக்கின்றன. மறைமுகமாக அறிவற்ற நிலையைத்தான் எடுத்துக் காட்டுகின்றது. எனவே தற்போதைய அரசாங்கம்நடைமுறைக்குக் கொண்டுவர இருக்கும் மும்மொழிக் கல்வித் திட்டம் "கல்வி அறிவுக்கே" என்ற நோக்கத்தை நிறைவேற்றுமென்று சகல மக்களும் எதிர்பார்க்கின்றனர்.

### விபத்தில் சிக்கிய இந்தியப் பிரதமர்

சென்ற நாலாம் திகதியன்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் சென்றுகொண்டிருந்த இந்திய விமானப் படையினரின் விமானம் விபத்துக் காரணமாய் விழுத்தப்பட்டதால் பிரதமர் சிறிதளவு காயமடைந்தனர். விமானத்துக்குப் பொறுப்பாயிருந்த ஐந்து விமானப் படை உத்தியோகத்தர் உயிரிழந்தனர். இவர்கள் முழு இராணுவ மரியாதையுடனும் தங்கள் சொந்த நகரங்களில் தகனம் செய்யப்படுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன.

இன்னும் சிலகாலம் தன் நாட்டைச் சேவிப்பதற்கான தருணம் தனக்குக் கிடைத்திருப்பதையிட்டுத் தான் கடவுளுக்கு நன்றி கூறுவதாகப் பிரதமர் அவர்கள் விபத்தின் சிலமணி நேரம் கடந்து பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியொன்றில் கூறினார். விபத்து ஏற்பட்டபொழுது பிரதமர் வடகிழக்கு மாநிலங்களைப் பார்ப்பதற்காகப் போய்க்கொண்டிருந்தனர். விபத்தைத் தொடர்ந்து இப்பிரயாணம் ஒத்திவைக்கப்பட்டது.

### யாழ். ஆதீன வாலிபர் விழா

தென் இந்திய திருச்சபை, யாழ். அத்தியட்சாதீனத்தின் வாலிபர் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்ட வாலிபர் மகாநாடும் விழாவும் நேற்றைய தினம் சாவகச்சேரியில் நடைபெற்றது. 105 வாலிபரும் பத்துத் தலைவர்களும் சமுகமாயிருந்தனர்.

காலை 9.00 மணிக்குச் சாவகச்சேரிச் சபை வாலிபரினால் நடத்தப்பட்ட ஆயத்த வழிபாட்டுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. மகாநாட்டின் சிந்தனைக்காகத் தெரியப்பட்டிருந்த விடயம்! சமுதாய முன்னேற்றத்திற்கு அவசியமானது சுவிசேடப் பிரசங்கமா, சமூக சேவையா என்ற கேள்வி. இதற்கு ஆதாரமான வேதப் படிப்பு கூட்டத்தை — வரணிச் சபை ஊழியன் திரு. S. ஜெயநேசன் அவர்களினால் நடத்தப்பட்டது. தொடர்ந்து கனம் A. C. மதனராஜ் அவர்களினால் சிந்தனை விடயத்துக்குரிய பேருரை வழங்கப்பட்டது. இந்த விடயத்தையொட்டிய கலந்துரையாடலும் உரைக்குப்பின் இடம்பெற்றது.

காலை 11.15 மணிக்கு மேற்படி விடயத்திலான இரண்டாம் கட்டப் பேச்சுப் போட்டி நடைபெற்றது. ஏற்கெனவே நடத்தப்பட்டிருந்த முதலாம் கட்டப் பேச்சுப் போட்டியில் முதலிடத்தை வட்டுக்கோட்டைச் சபை வாலிபர் சங்கமும் இரண்டாம் இடத்தைச் சாவகச்சேரிச் சபை வாலிபர் சங்கமும் பெற்றிருந்தன. இந்த இரண்டாவது கட்டப் போட்டியில் முதலிடம் தெல்லிப்பழைச் சபை வாலிபர் சங்கத்தினாலும், இரண்டாம் இடம் மானிப்பாய்ச் சபை வாலிபர் சங்கத்தினாலும் எடுக்கப்பட்டன.

பேச்சுப் போட்டியைத் தொடர்ந்து வேதப் புதிர்ப் போட்டி இடம்பெற்றது. இதில் வட்டுக்கோட்டை, சாவகச்சேரி, தெல்லிப்பழை, மானிப்பாய்ச் சபைகளின் வாலிபர் சங்கங்கள் பங்குபெற்றன. முதலிடம் மானிப்பாய்ச் சங்கத்தினாலும் இரண்டாம் இடம் தெல்லிப்பழைச் சங்கத்தினாலும் எடுக்கப்பட்டன.

மதிய போசனத்தைத் தொடர்ந்து வந்த பக்திப் பாடல் வேளையின்பின் நாடகப் போட்டி நடைபெற்றது. சாவகச்சேரிச் சபை வாலிபரினால் மேடையேற்றப்பட்ட "கெட்ட குமாரன்" நாடகத்திற்குத் தராதரப் பத்திரம் வழங்கப்பட்டது. மானிப்பாய் வாலிபர் மேடையேற்றிய "கனிந்த உள்ளம்" என்ற நாடகமும் சாவகச்சேரி வாலிபர் அளித்த நகைச்சுவை நாடகம் ஒன்றும் மிகவும் மெச்சப்பட்டன.

வாலிபர் பேரவையின் புது ஆண்டிற்கான உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது. தலைவர்: திரு. சத்தியன் துரையப்பா; காரியதரிசி: திரு. அன்னப்பா ஜெயசீலன்; பொருளாளன்: திரு. செல்வத்துரை ஜெயரூபன். பேரவை நிர்வாகக் குழுவிற்கான வேறு எட்டு அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

வைத்தியக் கலாநிதி திருமதி D. J. அம்பலவாணர் அவர்கள் இந்த நாளின் நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய வாலிபர் சங்கங்களுக்கும் ஏற்கெனவே நடத்தப்பட்டிருந்த உள்ளரங்கு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றிருந்த சங்கங்களுக்கும் தராதரப் பத்திரங்கள் வழங்கினார்கள். மகா கனம் அத்தியட்சர் அவர்கள் செய்த இறுதி செபத்துடனும் ஆசீர்வாதத்துடனும் வாலிபர் விழாவின் நிகழ்ச்சிகள் இனிது முடிவடைந்தன.

### விவாகம்

#### முத்தையா — சேனாதிராஜா

மானிப்பாய்த் திருச்சபையைச் சேர்ந்தவரும், இளைப்பாறிய ஆசிரியருமான திரு. P. W. J. முத்தையா, திருமதி முத்தையா ஆகியோரின் மகன் செல்வன் ஜெயவீரனுக்கும், வடக்கு ஏழாலைச் சபையைச் சேர்ந்தவரும் இளைப்பாறிய அஞ்சலக உத்தியோகத்தருமான திரு. J. D. சேனாதிராஜா திருமதி சேனாதிராஜா ஆகியோரின் புத்திரி செல்வி புஷ்பவதனிக்கும் பரிசுத்த மெய்விவாகம் சென்ற மாதம் 29 ஆம் திகதியன்று வடக்கு ஏழாலைத் திருச்சபையில் நிறைவேற்றப்பட்டது.

விவாக ஆராதனை சபைக் குரு கனம் S. T. ஆசீர்வாதம் அவர்களினால் கனம் A. C. மதனராஜ் அவர்களின் உதவியுடன் நடத்தப்பட்டது.

### வரவு செலவுப் பெருமதிப்பு

இம்மாதம் 15 ஆம் திகதியன்று நிதியமைச்சர் தற்போதைய அரசாங்கத்தின் முதலாவது வரவுசெலவுத் திட்டத்தைத் தேசியப்பேரவையிற் சமர்ப்பிக்கவுள்ளனர். அதற்கு முன்னோடியாக வரவுசெலவுப் பெருமதிப்பு சென்ற 7 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த மதிப்பின்படி 1978 ஆம் ஆண்டிற்கான மொத்தச் செலவுகள் ரூபா 1043·8 கோடியாகும். எதிர்பார்க்கப்பட்ட வருமானம் 681·3 கோடி ரூபா. குறைவுபடும் தொகை 362·5 கோடி ரூபாவாகும். நடப்பு வருடத்தில் எதிர்பார்த்த குறைவுத் தொகை 307.9 கோடி ரூபாவாக இருந்தது. இந்தக் குறைவுத் தொகையான 362.5 கோடி ரூபாயைக் கண்டுபிடிக்கத் தான் கொண்டு வரும் திட்டங்களை நிதியமைச்சர் தமது வரவுசெலவுத் திட்டங்களில் தெரியப்படுத்துவார்.

எதிர்பார்க்கப்படும் செலவுகளில் மிகப் பெரிய பங்கை எடுப்பது அரிசிப் பங்கீட்டுக்கு அரசாங்கம் வழங்கும் துணைப்படி — இது 84 3 கோடி ரூபாவாகும். மாவுக்கான துணைப்படிச் செலவு 28 கோடி ரூபா. மொத்தமாக உணவுப் பொருள் விநியோகத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் துணைப்படிச் செலவு 118 கோடி ரூபாவாயிருக்கும். இதற்கும் மேலான செலவினம் நாடு பட்டிருக்கும் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்காக இந்த வருடம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் தொகை — முதலும் வட்டியுமாக 209.8 கோடி ரூபாயாகும். 1978 ஆம் ஆண்டிற்கான வரவுகள் செலவுகளின் தொகையே முன்னொருபோதும் இருந்திராத அந்தளவு கூடிய தொகைகளாகும்.

இதற்கிடையில் இவை சம்பந்தமான ஒரு புதிய நடவடிக்கை நிதியமைச்சரினால் கொண்டுவரப்படவுள்ளது. இதன்படி நாட்டிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் கிடைக்கப்படும் மாதாந்த வருமானங்கள் அரசாங்கத்திற்குக் குறித்தனுப்பப்படல் வேண்டும். இது வரவுசெலவுத் திட்டத்தை அமுல் செய்வதற்கு மிகுந்த உதவி கொடுப்பதாகும் எனக் கூறப்படுகிறது. இத்தகவலைக் குறித்து அனுப்புவதற்கான பத்திரங்கள் இந்த வாரத்துக்குள்ளே அந்தந்தப் பகுதிக் கிராம சேவையாளர் மூலமாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் கொண்டு செல்லப்படவிருக்கிறது.

## தியானம்

### ஆத்துமாக்கள் மீது அன்பு

"தப்பு வழியிலிருந்து பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்திலிருந்து இரட்சிக்கிறான்"
(யாக்கோபு 5:20)

என்ன அற்புதமான சிந்தனை! நான் ஒரு ஆத்துமாவை நித்திய மரணத்தினின்றும் காப்பாற்றக் கூடுமென்பது. இது எப்படிச் சாத்தியமாகும்? நான் ஒருவனைத் தனது தவறான பாதைகளிலிருந்து திருப்பினால், இதுதான் நமது அழைப்பு. மதக் குரவரினது மட்டுமல்ல; ஒவ்வொரு கிறிஸ்தவனதும் அழைப்பு — பாவிகளை இரட்சிக்கும் பணியில் பங்குகொள்வது.

கிறிஸ்துவும் அவரது அன்பும் நம்மை ஆட்கொண்டபோது, அவர் தமது அன்பை அளித்தார். அயலவரை அழைத்தது வாவென்றுதான். இவ்விதமாய் விண்ணரசு விரிவடையும். எவனொருவன் இதயத்தில் கிறிஸ்துவின் அன்புண்டோ அவன் அத்தால் நெருக்கி ஏவப்பட்டு அயலவனிடம் அதனைச் சொல்லியாக வேண்டும். ஆதித் திருச்சபையின் இளமைப் பருவத்தில் இதுதான் நடந்தது. பரிசுத்த ஆவியின் பண்டிகைத் தினத்தன்று அவர்கள் அனுபவித்த கிறிஸ்துவின் அன்பை அனைவரோடும் பகிர்ந்து கொண்டார்கள். முதலாம் நூற்றாண்டிலே கிறிஸ்து மதம் வேகமாகப் பரவியதற்குக் காரணம் குணமடைந்த ஒவ்வொரு கிறிஸ்தவனும் மற்றவர்களுக்கு இந்நற்செய்தியைக் கூற முற்பட்டமை என்று புற மதஸ்தர்கள் நூல்கள் பறைசாற்றுகின்றன.

இன்றைய திருச்சபைக்கு நேர்ந்து விட்டதென்ன? அநேக கிறிஸ்தவர்கள் அடுத்தவனைக் கிறிஸ்துவண்டை வழிநடத்துவதை அடியோடு மறந்துவிட்டார்கள். அவர்களிலுள்ள அன்பு அத்தனை பெலவீனமாய் க்ஷீரணித்துப்போய் இருப்பதால் மற்றவர்களுக்குதவும் எண்ணம் மறைந்து போயிற்று. கிறிஸ்துவின் அன்பை எடுத்துக் கூறக் கிறிஸ்தவர்களை நெருங்கி ஒடுக்கப்படுகிற காலம் வெகு சீக்கிரம் எதிர்வருவதாகக் கொண்டு சில வருடங்களுக்கு முன்பு கொரியா தேசத்திலே ஏற்பட்ட எழுப்புதலில் மனந்திரும்பிய ஒவ்வொரு கிறிஸ்தவன் இதயத்திலும் கிறிஸ்துவின் அன்பு கொழுந்துவிட்டெரியத் துவங்கியதால் மற்றவர்களிடம் அவ்வன்பைப் பகிர்ந்துகொள்ளத் தமதுள்ளத்திலே நெருக்கப்பட்டார்கள். ஒவ்வொருவரும் பிறிதொருவரை இரட்சகரிடம் வழிநடத்தியிருந்தாலொழிய சபையில் அங்கத்துவம் கொடுப்பதைக் காலம் தாழ்த்தி வைத்தார்கள். இன்னொருவர்தான் ஒருவருக்குச் சான்றாகியிருந்தது அங்கத்துவம் பெறுவதற்கு.

கிறிஸ்துவின் ஐக்கிய உறவுடன் உங்களைச் சோதித்துப் பாருங்கள், கர்த்தருடைய கிருபையின் வரப்பிரசாதத்தைப் பெற்றிருக்கும் நீங்கள் உங்கள் ஆத்துமாவைப்பற்றி மட்டுமல்லாது, அந்தக் கிருபையின் அன்பை அடுத்தவருக்கும் சொல்லுங்கள். ஆத்துமாக்களை அவரண்டை அழைத்து வருவதிலுள்ள உண்மையான ஆனந்தத்தை அப்போதுதான் உணருவீர்கள்.

தேவன்பினால் நிரப்பப்பட்டு நம்மை முற்றாய் அர்ப்பணித்து ஆத்துமாக்களை அவரண்டை அழைத்துவர ஊக்கமாய்ச் செபிப்போமாக,

## உங்கள் சிந்தனைக்கு

### ஓய்வு நேர உபயோகம்

நமது ஓய்வு நேரத்தை உபயோகிக்கும் வகைக்கு இயேசு கிறிஸ்துவிலே ஒரு திருட்டாந்தத்தைக் காணலாம்; ஏனெனில், அவர் பூரண சுயாதீனர். வேலை செய்யவும் அவருக்குச் சுயாதீனம் இருந்தது; விளையாடவும் சுயாதீனம் இருந்தது; சீடருக்குப் போதிக்கச் சுயாதீனம் இருந்தது; சிறுவரைச் சேர்த்துக் கொள்ளவும் சுயாதீனம் இருந்தது. அப்பம் பிட்கவும் பாத்திரத்தைப் பகிரக் கொடுக்கவும் சுயாதீனம் இருந்தது; அன்பினால் நமக்காய்த் தம்மை அர்ப்பணிக்கவும் சுயாதீனம் இருந்தது. சரீர ஓய்வுக்கும் ஆத்ம இளைப்பாற்றலுக்கும் அவர் தமது ஓய்வு நேரத்தை உபயோகித்தார். தனிச் செபத்திற்கும் பிறருடன் சேர்ந்திருக்கும் அந்நியோந்நியத்திற்கும், தன் வாழ்விற் சமீபத்திலான சம்பவங்களைச் சிந்திப்பதற்கும், வரவிருக்கும் காரியங்களுக்குத் தன்னை ஆயத்தம் செய்வதற்கும் தனது ஓய்வு வேளைகளை அவர் உபயோகித்தார்.

பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் நமக்கும் கிடைக்கும் மீட்பைப் பற்றிய நற்செய்தியை அவர் நமக்குக் கொண்டு வந்தது போலவே ஓய்வு நேரம் பற்றிய நற்செய்தியையும் கொண்டு வருகிறார். கிறிஸ்துவைப் பின்பற்றி நாமும் நமது ஓய்வு வேளைகளைத் தனிச் செபத்திற்கும், நாளாந்தத் தியானப் படிப்புகளுக்கும் கிறிஸ்தவ அந்நியோந்நியத்திற்கும் உபயோகிப்போமாக ...... இயேசு கிறிஸ்துவின் நல்ல செய்தி நமது சீவியத்தின் முழுமைக்கும் — நமது ஓய்வு நேர அனுபவங்களுக்கும் கூட — அர்த்தமும் மதிப்பீடும் அருளுகிறது...... இயேசு கிறிஸ்துவின் நல்ல செய்தியை நாம் ஆராய்ந்தறியவும் அதைக் கொண்டாடவும் நமது ஓய்வு நேரம் தருணமளிக்கிறது.

["திருச்சபைத் தூதன்" என்ற ஆங்கிலச் சஞ்சிகையில் பிறெட் டொட்ஜ் எழுதிய கட்டுரையில் ஒரு பாகம் — தமிழாக்கம் செய்யப்பட்டது]

---

### கல்லூரிக்குப் புதிய அதிபர்

கண்டியிலுள்ள திரித்துவக் கல்லூரி புதிய அதிபரைப் பெறவுள்ளது. கொழும்பு ரோயல் கல்லூரியின் அதிபராகவும், பின்னர் இந்தியாவில் சேரம்பூர் இறையியற் கல்லூரியிலும் சர்வகலாசாலையிலும் விரிவுரையாளராகவும் பல வருடங்கள் கடமையாற்றிய கலாநிதி கனம் W. G. விக்கிரமசிங்கா அவர்கள் வருகிற ஜனவரி மாத இறுதிக் காலத்திலிருந்து இப்புதிய அதிபராகப் பதவியேற்பார்.

கனம் விக்கிரமசிங்கா அவர்கள் சேரம்பூரில் இருந்து இறையியற் பட்டமும், சிக்காக்கோவிலுள்ள பப்திஸ்த இறையியற் கல்லூரியிலிருந்து இறையியல் கலாநிதிப் பட்டமும் பெற்றவர்கள். ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையின் எம். ஏ. பட்டமும், இலங்கைச் சர்வகலாசாலையிலிருந்து Dip. Ed. தராதரப் பத்திரமும் பெற்றவர்கள்.

சுமார் பத்து வருடகாலமாக இலங்கை பப்திஸ்த சபைச் சங்கத்தின் தலைவராகவும் கடமையாற்றியவர்கள். தற்பொழுது அகில ஆசிய பப்திஸ்த ஐக்கியத்தின் தலைவராகவுள்ளனர்.

## செய்தித் துணுக்கைகள்

அடுத்த ஆண்டுத் தொடக்கத்திலிருந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருக்கும் எல்லாப் பொலிஸ் நிலையங்களுக்கும் தமிழ் நல்லாய்த் தெரிந்த ஐந்து உத்தியோகத்தரை இடமாற்றம் செய்யும்படி பிரதமர் திரு. J. R. ஜெயவர்த்தனா அவர்கள் பணித்திருக்கிறார்கள்.

* * *

மகாவெலி அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாம் கட்ட வேலைகளுக்காகப் பிரித்தானிய அரசு இலங்கைக்கு 650 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கியுள்ளது. இதை கொண்டு கட்டட வேலைகளுக்கான யந்திரங்களும், யந்திர உழவு போன்ற விவசாய யந்திரங்களும் பெற்றுக் கொள்ளப்படும்.

* * *

மகாவெலி கங்கை நீர்ப்பாசனத் திட்டத்திற்காக அமெரிக்க அரசாங்கம் 58 இலட்சம் டொலர் (சுமார் 520 இலட்சம் ரூபா) கடனுதவி அளிக்க முன்வந்துள்ளது. இது யந்திரங்கள் பெறுவதற்கும் முந்திய கட்டட வேலைகளின் செலவுகளைக் கொடுப்பதற்கும் உபயோகமாகும். இக்கடன் நாற்பது வருடத்தில் கொடுத்துத் தீர்க்கப்பட வேண்டியதாகும்,

* * *

ரொடேசியா சட்டவிரோதமாகத் தன்னைத்தானே சுயாதீன நாடாக்கிக் கொண்டதன் பன்னிரண்டு வருட நிறைவேற்ற நாள் இது. தங்களை ஆளும் நாடுகளை விட்டுப் பிரிந்து தம்மைத்தாமே சுயாதீன நாடுகளாகக் கருதிக்கொண்ட நாடுகளில் ரொடேசியாவே முதலாவது என்று சொல்லக்கூடும்,

* * *

இலங்கையிலிருக்கும் உணவுப் பொருட் பங்கீட்டு முறை அடுத்த ஜனவரி மாதம் முதல் ஒரு குறிக்கப்பட்ட அளவுக்கு அகற்றப்பட்டுவிடும். குறிக்கப்பட்ட ஒரு அளவுக்கு மேலான வருமானம் பெறுபவர்களுக்குப் பங்கீட்டு முறையில் உணவுப் பொருட்கள் வழங்கப்பட மாட்டாது. இவர்களின் பங்கீட்டுப் புத்தகங்கள் திருப்பி அரசாங்கத்திடம் கொடுக்கப்படவேண்டியது. சென்ற உலக மகா யுத்த காலத்தில் இந்தப் பங்கீட்டு முறை அமுலுக்குக் கொண்டுவரப் பட்டது. அதாவது சுமார் 85 வருடங்களுக்கு முன்பதாக.

* * *

இப்பொழுது புதிதாய்க் கொண்டுவரப்படும் விதிகளின்படி உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களும், உப தலைவர்களும், இந்தளவும் செய்யப்பட்டது போல் அங்கத்தவரினால் தெரிவு செய்யப்படாமல், அங்கத்தவரைப் போலவே நேரடியாக வாக்காளரின் வாக்குகளினால் தெரிவு செய்யப்படுவர் எனத் தெரிகிறது.

* * *

லண்டனுக்கண்மையிலுள்ள சேரிப்புற வீதியொன்றில் வந்து குடிகொண்டிருக்கும் 180 பேர் கொண்ட கூட்டம் ஒன்று தாம் அந்தச் சேரிப்புறத்தை "பிறெஸ்ரோனியா சுதந்திரக் குடியரசு" ஆக மாற்றியுள்ளார்களெனவும், பிரித்தானிய அரசாங்கத்தின் ஆட்சியின் கீழிருந்து தாம் விலகுவதனால் தமது குடியரசை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் அங்கீகரித்துக்கொள்ள வேண்டுமெனவும் பிரித்தானிய இராணிக்கும், ஐரோப்பியப் பொதுச் சந்தை ஸ்தாபனத்திற்கும், அமைச்சர் பேரவைக்கும், ஐ. நா. ஸ்தாபனத்திற்கும் கடிதங்கள் அனுப்பியுள்ளதாக ரொய்ட்டர் செய்தி ஒன்று கூறுகிறது.

## சிறுகதை

### புஜிமிரா சானின் குணப்படுதல்

ஒக்கினாவாவில் சூரி என்பது ஒரு கிராமம். புஜிமிரா சான் அங்கிருந்த ஓர் இளம் பெண் — மாந்திரியம் பயின்றுகொண்டு வந்தவள். அன்று அவள் தனது பயிற்சிகளை முடித்து மாந்திரிகருக்குரிய பட்டம் சூட்டப்படும் நாள். ஆனால், அன்றே அவளது சிறிய தகப்பனும் காலமானார். மரித்தவருக்கு நெருங்கிய உறவினர் என்ற முறையில் அவள் அவருடைய மரணச் சடங்குகளுக்குப் போகவேண்டிய கட்டாயம் இருந்ததால், தனது பட்டம் சூட்டும் வைபவத்திற்கு அவள் போகவில்லை. சிறிய தகப்பனுடைய மரணம் சம்பந்தமான ஆராதனைகளுக்குப் போயிருந்து நடந்தவைகளை அவதானித்தாள். அவளுடைய மனதிலே பலவிதமான கேள்விகளும் எழும்பத் தொடங்கின.

மரணச் சடங்குகள் முடிந்தவன்று இரவு 11.00 மணிக்குச் சிறிய தகப்பனுடைய இறுதி ஆராதனைகள் நடந்த ஆலயத்திற்குத் தனி வழியே போனாள். அவள் மனதிலேயெழுந்துகொண்டிருந்த கேள்விகள் அவளைப் பதைக்க வைத்துக்கொண்டிருந்தன. மூன்று மணி நேரமாக ஆலயத்திலிருந்த வண்ணம் தன் உள்ளத்தோடு போராடினாள். குருவானவரோடு வாதாடினாள்; தன்னை வாட்டிக்கொண்டிருந்த சிந்தனைகளை எப்படியாவது அடக்கிப்போட வகை தேடினாள். முடியாமற் போனது.

இறுதியில் மாந்திரியத்தைக் கைவிட்டுக் கிறிஸ்துவைத் தன் சொந்த மீட்பராக ஏற்றுக் கொண்டு, அவருக்காய்த் தன்னை அர்ப்பணித்தவளாய்த் தன்னில்லம் சென்றாள். "என் சிறிய தகப்பனார் இதேகட்டத்தில் மரித்திருக்காது போனால் நான் இப்பொழுதும் மீட்படையாதிருந்திருப்பேன்" எனப் பிற்பாடு அறிக்கை செய்தாள். சொற்ப காலத்திலேயே அவளைத் தொடர்ந்து அவள் உறவினரில் ஏழு பேரும் கூடக் கர்த்தரை ஏற்றுக்கொண்டனர்.

["நற்செய்தி பரப்பி" என்ற சஞ்சிகையில் ஆங்கிலத்தில் வெளியான கதையைத் தழுவி எழுதப்பட்டது.]

---

### இலங்கைக்கு அமெரிக்க உதவி

• இலங்கைப் பிரதமர் திரு. J. R. ஜெயவர்த்தனா அவர்களுக்கு அமெரிக்க முதல்வர் ஜிம்மி கார்ட்டர் சமீபத்தில் அனுப்பிய கடிதமொன்றில் அடுத்த ஐந்து ஆண்டுகளும் அமெரிக்கா இலங்கைக்குக் கொடுக்கும் உதவித் தொகையைக் கணிசமான ஒரு அளவில் கூட்டிக் கொடுக்க வேண்டும் எனத் தான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருப்பதாகக் கூறினார். எனினும் இந்த உதவித் தொகையைப் பயன்படுத்துவதற்குத் திடமான ஆராய்ச்சியும், நிர்வாகமும் அவசியம் எனவும் அதை இலங்கை அரசாங்கம் கவனித்துக் கொள்ளுமெனத் தாம் நம்புவதாகவும் முதல்வர் கார்ட்டர் அவர்கள் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

# The Morning Star

**11th November, 1977**

## The Christian Home

Under the auspices of the Women's Fellowship of the Jaffna Diocese of the Church of South India, the Christian Home Festival will be celebrated tomorrow at the Manipay Church at 3 p. m. The observance of a Christian Home Week, ending with the Festival, has become now a welcome annual feature of the life of the Diocese and rightly organised by the Women's Fellowship. It is a practice in several churches in America to observe one Sunday in a year as 'the Mothers' Day' or 'the Festival of the Christian Home'. One cannot visualise a home without a mother in it. Probably that is why these American churches call such a Sunday by either of the above names. The Christian Home is the centre of the Christian community. In fact, it is a church in miniature. And the chief person in the Home, beside Jesus Christ, is the mother. These facts do not need further emphasis.

We are living in a fast changing world-changing fashions, changing ways of living, changing means of transport and communications, changing ideals, and changing priorities and values. Our country too is going through this experience. In such a world the Christian Home has a very significant and important role to play in the way it conducts itself and nurtures its members to reflect the never-changing Lord and His eternal values. "No group of human society offers greater opportunities for spiritual venturing than a family" — particularly a Christian Family.

We should like to emphasise here two truths about a Christian Home. First, a Home, with Jesus Christ at its centre, is a place where its members sustain and support each other in love. In a world wrestling with competition and seeking power and prestige, these do not, or at any rate should not, find a place in a Christian Home. In it one can be oneself without any pretence; one knows that one is loved for one's sake and not for obtaining gains from another; and one can relax in the security of mutual confidence. It is a place where all its members gather round the Family Altar for worship and are knit together by bands of love — love for each other and love for God. In such a home we have others to raise us when we fall, comfort us in our sorrow, encourage us in our failure or defeat — and even to show us the strength and grace of God. The Christian Home can, and should be, an example in these matters to the entire community in the midst of which it is sited — both Christian and non-Christian.

Secondly, the Christian Home, with Jesus Christ as its Head, is a place where resources for venturing are available and where its members lay the foundation for the future. The Home should teach its members, specially the youth, that they have a dependable base of love and truth. The young would, hence, push out into the world with confidence that they have a secure base. The young should be taught and trained to face the future courageously and become useful citizens. In this connection, two strong temptations should be resisted and overcome by the elders in the home. First, there is the temptation of mollycoddling the children and treating and allowing the growing youth to remain always static in their early years. Parents often ignore the fact that their children grow daily not only physically, but also mentally and spiritually. The other temptation is to indoctrinate our children with ideas, ideals, attitudes and prejudices of our own generation. We make the mistakes of regarding these as ultimate truths. We do also insist on their thinking and acting as we do. And we feel irritated, and even scandalised, when our children are exposed to ideas which are different for our own. We elders often tend to forget that we ourselves in the days of our youth were called revolutionaries because of the dreams we dreamt, the visions we beheld, and the ideals that we cherished, which met the disapproval of our elders. We also forget, time and again, that Jesus Himself was regarded as a revolutionary because he broke with many of the traditions of the Jews in the name of the freedom of God.

At the present time, when old customs and systems are crumbling like sand castles, we need very badly enduring principles to guide us. The Christian Home must drill into the minds of its young the eternal verities of Peace, Right, Justice, Truth and Love for which Jesus Christ ever stood. From such a Home, then, would issue young men and women determined to eschew hatred and violence, and dedicated to support and propagate values which last, reflecting the mind of Jesus, and provide a springboard for great venturing and a worthy future. At the evacuation of Dunkirk during World War II, one of the most gallant naval operations ever carried out, the order given to little boats was "Steer for the sound of the guns". Should we not be confident that the youth grown mature in their homes in love and in loyalty to lasting values would move out into the world unafraid to venture and "steering for the sound of the guns"?

## The Lord Jesus Christ's Five Vital Questions to the People

*Taken from Addresses on this subject by the Rev. Dr. James S. Mather.*

I

"What is a man profited if he shall gain the whole world and lose his own soul?"

— *St. Mathew 16:26.*

Here is an important question on man's values: imagine a basket placed before you, full of many things you like to possess, and you are asked to choose one only; what will you select? To understand the meaning of our Lord's question that is before us today, it will help, first of all, to see what the Bible taught about the world where we live in.

The first important thing said in the Old Testament is that it was created by God; it belongs to Him, He is in control, in full charge. Look at Job 9:12, "Behold, He taketh away, who can hinder Him? Who will say unto Him, what doest Thou?" See 11:10 in the same Book, "If He cut off, and shut up, or gather together, who can hinder Him?" King David said in the Book of Psalms, in many places, "The Lord reigns", see Ps. 93:1; 96:10; 97:1; 99:1; see also Isaiah 52:7; Micah 4:7 etc. God's sovereignity is also referred to in the New Testament, Mathew 6:27; 28:18; Luke 3:8; 21:18; Rom. 16:25; 27; Phil. 3:21 etc.

This being so, the man who seeks to "gain the whole world", or even a small part of it, to use it as he wished, is certainly foolish, and makes wrong choice, "illegal possession". Our Lord said, "Lay not up for yourselves, treasures upon earth ... but lay up for yourselves treasures in heaven". See Mathew 6:19-20. Besides, seeking "to gain the whole world" is seeking to dethrone God; and man seeking to sit on it. Man cannot defeat God; and the Bible as well as History teaches clearly that all who tried to dethrone God, destroyed themselves. During the short period of "*illegal possession*", look at the worries, anxieties, sorrows, defeats etc. man went through!

The chief point behind our Lord's question is that God is man's greatest and most essential need in this life, that this iife is entirely dependent upon Him; without Him, or dropping God out, man is certain to be crippled morally and spiritually, not only here in this world, but after death in Eternity. Man's life, short as it is, will be meaningless, and miss its Divine purpose when God's sovereignity is ignored.

Further, look at the words, "Lose his own soul". It is a warning against man's neglect of his soul. Man is primarily a spiritual being, he is created in the image of God, he has body, mind and soul or spirit. These three are one whole, but the soul is the most precious, and the other two are to be the soul's tools or instruments, to achieve the high purposes God had for his life in this world.

The soul has many enemies, and even one's body and mind will turn to be a man's enemies, when he lives this life, away from God, and when he is not in right relationship with his owner-God. Many people destroy themselves by living as if the body was the main thing, and they thought only of their physical side.

The Lord said, "Man shall not live by bread alone". The truth is that beyond his physical needs there are his spiritual needs, and his eternity depended on his life here and now in this world, being lived in fellowship and communion with God, as a child lived in the parental home.

So, our Lord's question to all people, through the centuries, to this day, is, what will you choose in the basket before you? Pleasures of this world, which soon vanish and bring eternal hell? Or, God who is Heaven Himself and is the source of eternal peace and joy, here and hereafter?

## A Service of Thanksgiving

for the life of

**Regina Ratnammah Selliah**

(wife of Mr. K. A. Selliah)

will be held at the

Cathedral Church, Vaddukoddai

on

Satutday, 19th November, 1977

at 4 p. m.

*All relations and friends are cordially invited.*

Pavilion View,
Vaddukoddai.

## The Jaffna College Round Table

Mr. & Mrs. R. S. Virasinghe, the latter of whom is on the staff of Jaffna College, Vaddukoddai, were feted some days back by the Round Table (its Teachers' Guild) on their recent marriage. After tea, Mr. Ragunathan Mudaliyar, the President of the Round Table, presided over the meeting that followed. The speech of feliciation was made by Mrs. L. B. Thambirajah and a presentation was made to the couple on behalf of the Round Table by its Secretary, Miss S. Selvadurai. Mrs. Suganthi Virasinghe replied expressing their gratitude to the Round Table for this happy function and for the gift.

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna, on Friday, 11th November, 1977.